DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 139/2020** |
| Deposition of Witness for | : PW 5 |
| Name | : திரு. மாரியப்பன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 31.07.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 31 th **July** 2026.

**A1 died. A2,A3 எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். இதற்கு முன்பு நான் சின்னகோவிலான்குளம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 28.09.2017ம் தேதி 18.00 மணிக்கு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த செந்தட்டி வடக்கு தெருவை சேர்ந்த ஆனைமுத்து (எ)துரை கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு

செய்து அதன் தன்மைக்கேற்ப காவல்நிலையக்குற்ற எண்.118/2017 ச/பி.341, 294(பி), 324, 506(2) இதச ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். பின்னர் அதன் அசல் மற்றும் புகார் மனுவை சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அதன் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அதன் ஒரு நகலை விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் கோமதிநாதன் அவர்களின் பார்வைக்கும் வைத்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் கோமதிநாதன் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

புகார் வாக்குமூலத்தில் அ.சா.1 காவல் நிலையம் வந்து பின்பு நான் அவரை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தாக புகாா வாக்குமூலத்தில் துலங்குமா என்றால் துலங்காது. புகார் வாக்குமூலத்தில் காவல் நிலையத்தில் இருந்து மெடிக்கல் மேமோ கொடுத்து அ.சா.1 சிகிச்சைக்காக அரசு மருத்துவமனையில் அனுப்பியதாக துலங்குமா என்றால் துலங்காது. நான் சொல்லக்கூடிய நாள் நேரத்தில் அரசு மருத்துவமனை சென்று அ.சா.1–யிடம் புகார் வாக்குமூலம்பெறவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. நான் காவல்நிலையத்தில் வைத்து புகார் வாக்குமூலம் பெற்றுவிட்டு அந்த புகார் வாக்குமூலம் வழக்கிற்கு எதிராக இருந்ததால் பின் யோசனை செய்து எழுதாத வெள்ளை பேப்பரில் அரசு மருத்துவமனைக்கு சென்று கையெப்பம் பெற்று எதிரிகளுக்கு எதிராக பொய்யாக வழக்குபதிவு செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கம் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

M MARI Digitally signed by M MARI Date: 2026.07.31 20:01:15 +0530